




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஜுன். 16, 2023 — புதுக்கோட்டை — 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 252 ❖ ரூ.10


### நீதிபதியின் கேள்விக்கு காணொலியில் பதிலளித்த செந்தில்பாலாஜி

# இன்று தீர்ப்பு

## தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற உயர் நீதிமன்றம் அனுமதி அமைச்சரவையில் இருந்து நீக்க ஆளுநரிடம் அதிமுக மனு

சென்னை, ஜுன். 16–

அமைச்சர் செந்தில்பாலாஜியை 15 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்கக் கோரி அமலாக்கத் துறை தாக்கல் செய்த மனு மற்றும் இடைக்கால ஜாமீன் வழங்க கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தீர்ப்புக்காக இன்று ஒத்திவைத்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் செந்தில்பாலாஜியை 15 நாட்கள் தங்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்று அமலாக்கத் துறையினர் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். இதேபோல் செந்தில்பாலாஜி தரப்பில் இடைக்கால ஜாமீன் வழங்க கோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதி அல்லி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அமைச்சர் செந்தில்பாலாஜி மருத்துவமனையில் இருந்து காணொலி காட்சி மூலமாக ஆஜர் படுத்தப்பட்டார். அப்போது அவரிடம் 'அமலாக்கத் துறையினர் தாக்கல் செய்த மனு கிடைத்ததா?' என நீதிபதி கேள்வி எழுப்பினார். அதற்கு செந்தில்பாலாஜி 'இல்லை' என தெரிவித்ததை அடுத்து, மனுவை கையெழுத்திட்டு பெற்றுக் கொள்ளும்படி நீதிபதி அறிவுறுத்தினார்.

தொடர்ந்து நடந்த வாதத்தில், வழக்கில் உண்மையை வெளி கொண்டுவர செந்தில்பாலாஜியை காவலில்வைத்துவிசாரிக்க வேண்டியது அவசியம் என்றும், போக்குவரத்துக் கழக நியமனங்களுக்கு பெற்ற தொகை குறித்த முழு விவரங்களை பெற வேண்டி உள்ளது என்றும் குறிப்பிட்ட அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்தரேசன், அமலாக்க துறையின் விசாரணைக்கு ஒத்துழைக்காத செந்தில்பாலாஜியை காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த வாதத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த செந்தில்பாலாஜி தரப்பு மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ, கடந்த 13–ம் தேதி காலை 7 மணி முதல் 14–ம் தேதி அதிகாலை 2 மணி வரை செந்தில்பாலாஜியிடம் விசாரணை நடத்தியுள்ளதால், அவரை காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க கூடாது என்று வாதிட்டார். மேலும், இதய அறுவை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் செந்தில்பாலாஜி சிகிச்சை பெற உயர் நீதிமன்றம் அனுமதி அளித்து பிறப்பித்த உத்தரவு குறித்தும் முதன்மை அமர்வு நீதிபதி அல்லியிடம் தெரிவிக்கப்பட்டது

இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக உள்ள அமலாக்கத் துறையின் துணை இயக்குநர் கார்த்திக் தாசரி, இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது முதல் கைது வரைக்கும் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், கைது செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கான காரணம் குறித்தும் தனது வாக்குமூலத்தை அளித்தார்.

இறுதியாக அமலாக்கத்துறையினர் 15 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி கோரிய மனு குறித்து செந்தில்பாலாஜியின் விருப்பம் குறித்து நீதிபதி அல்லி கேள்வி எழுப்பினார். அதற்கு அவர் 'விருப்பமில்லை' என்றார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, இந்த இரண்டு மனுக்கள் மீதான தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.



### ஆளுநரிடம் அதிமுக மனு

ஆளுநர் ஆர்.என்.ரவியை, அதிமுக மூத்த நிர்வாகிகளான சி.வி.சண்முகம், சி.விஜயபாஸ்கர், ஜெயக்குமார் ஆகியோர் சந்தித்து செந்தில்பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும் என்று மனு அளித்தனர். இது தொடர்பாக சி.வி.சண்முகம் பின்னர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "வேலை வாங்கி தருவதாக பணம் வாங்கி மோசடி செய்த வழக்கில், உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் நீதிமன்ற காவலில் உள்ள செந்தில்பாலாஜி அமைச்சராக தொடருவது சட்டத்துக்குப் புறம்பானது. அரசியலமைப்புக்கு முரணானது. இது தொடர்ந்தால் இந்திய ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படும். என்று அவர் கூறினார்.

## கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை , ஜுன். 16–

சென்னை–கிண்டியில் ரூ.230 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

சென்னை கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் ரூ.230 கோடியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை தரை தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் 51,429 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் இதயம், நுரையீல், நரம்பியல், சிறுநீரகவியல், புற்றுநோய் உள்ளிட்ட பல்துறைசிகிச்சைகள், 1,000 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

'கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மருத்துவமனையை ஜுன் 5–ம் தேதி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு திறந்து வைப்பதாக இருந்தது. இதற்காக, அரசின் சார்பில் அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கும் பணி, திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. குடியரசுத் தலைவர் வெளிநாடு பயணத்தால் மருத்துவமனை திறப்பு தள்ளிவைக்கப்பட்டது.

இதையடுத்து, மருத்துவமனையை ஜுன் 15–ம் தேதி குடியரசுத் தலைவர் திறந்துவைக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டு, பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. ஆனால், குடியரசுத் தலைவர் வராததால், இந்த மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து மருத்துவமனையின்உள்ளே அமைக்கப்பட்டுள்ள மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வெண்கல சிலையையும் முதல்வர் திறந்து வைத்தார்.



### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாளை மறுநாள் புதுக்கோட்டை வருகை

## பிளக்ஸ் பேனர் வைக்க வேண்டாம் மாவட்ட செயலாளர்கள் கூட்டறிக்கை

புதுக்கோட்டை , ஜுன். 16–

ஜல்லிக்கட்டுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு பெற்றுத் தந்த முதல்வருக்கு நடைபெறக்கூடிய பாராட்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கவுள்ளதால் புதுக்கோட்டையில் விழா ஏற்பாடுகள் தீவிரமடைந்துள்ளது.

புதுக்கோட்டைதெற்கு மாவட்ட செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி மற்றும் வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது:–

நீதிமன்ற உத்தரவு, தலைமைகழக அறிவிப்பு மற்றும் தமிழக அரசின் அறிவிப்பு ஆகியவற்றை பின்பற்றுகின்ற வண்ணம் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்று தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தமிழகத்தில் உள்ள அனைத்து ஜல்லிக்கட்டு கூட்டமைப்பின் சார்பில் நடைபெறும் நன்றி அறிவிப்பு கூட்டத்திற்கு ஜீன்18 ம் தேதி ஞாயிற்றுகிழமை அன்று இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு விழாக்குழுவின் சார்பில் நன்றி அறிவிப்பு கூட்டம் நடைபெறுகின்ற திடலில் வைக்கபடுகின்ற விளம்பர பதாகை,பேனர் தவிர கழக தோழர்கள் விளம்பர பதாகை மற்றும் பேனர்கள் வைப்பதை கட்டாயம் தவிர்க்கவேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

சமீபத்தில் முதல்வர் கலந்துகொண்டசில அரசு நிகழ்ச்சியில் விளம்பர பதாகைமற்றும்பேனர்கள் வைக்கபடாமல் பொதுமக்களை அழைத்து நிகழ்ச்சியை சிறப்பாகநடத்தினார்கள். அதனை மனதில் வைத்துக்கொண்டு பொதுமக்கள் மனதில் இடம்பெறும் வகையில் நாம் சொல்லுகின்ற கருத்துக்கள் அவர்களின் மனதில் பதிய வேண்டும் என்கிற இலட்சியத்தை கடைப்பிடித்து பெரும் திரளான பொதுமக்களை அழைத்து வந்து நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திவெற்றிபெறசெய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




### உயிர்த்தியாகம் செய்த அமைதிப்படை வீரர்களுக்கு

## ஐ.நா. தலைமையகத்தில் நினைவிடம் இந்தியா முன்மொழிந்த தீர்மானம் ஏற்பு

நியூயார்க் , ஜுன். 16–


உயிர்தியாகம் செய்த அமைதிப்படை வீர்களுக்கு ஐ.நா தலைமையகத்தில் நினைவுச் சுவர் எழுப்ப வேண்டும் என்று கோரி இந்தியா கொண்டு வந்த தீர்மானம் சுமார் 190 நாடுகளின் ஒப்புதலுடன் ஏற்கப்பட்டுள்ளது.

வன்முறையால் பாதிக்கப்படும் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக ஐநா சார்பில் அமைதிப் படை செயல்பட்டு வருகிறது.இதில்,பல்வேறு நாடுகளின் வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியின்போது அமைதிப்படை வீரர்களில் பலர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உயிர்தியாகத்தைப் போற்றும் வகையில், ஐநா தலைமையகத்தில் நினைவுச் சுவர் எழுப்ப வேண்டும் என்று ஐ.நா. பொது அவையில் இந்தியா புதன்கிழமை வரைவுத் தீர்மானத்தை கொண்டு வந்தது.

ஐ.நா.,வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் இந்த வரைவுத் தீர்மானத்தை வாசித்தார். அப்போது, "உலகில் அமைதியை நிலைநாட்டும் நோக்கில் 125 நாடுகளைச் சேர்ந்த 10 லட்சத்துக்கும் மேற்பட்ட அமைதிப்படை வீரர்கள் 71பகுதிகளில் பணியாற்றி இருக்கிறார்கள். தற்போதும் கூட மோதல் நிகழும் பகுதிகளில் 80 ஆயிரத்துக்கும்மேற்பட்ட அமைதிப்படை வீரர்கள் பணியாற்றி வருகிறார்கள். அமைதி காக்கும் பணியில் இதுவரை 4,200 வீரர்கள் உயிர் தியாகம் செய்திருக்கிறார்கள்" என ருச்சிரா கம்போஜ் தெரிவித்தார்.

இந்தியாவின் முயற்சியால் கொண்டு வரப்பட்ட இந்தவரைவுத் தீர்மானம், இந்தியா, வங்கதேசம், கனடா, சீனா, டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், இந்தோனேஷியா, ஜோர்டான், நேபாள், ருவாண்டா, அமெரிக்கா உள்ளிட்ட 18 நாடுகளால் ஐ.நா. பொது அவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வரைவுத் தீர்மானம் ஓட்டெடுப்பு இன்றி நிறைவேற்றப்பட்டது. சுமார் 190 நாடுகள் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ட்விட்டர் பதிவில், "ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இந்தியாவினால் முன்மொழியப்பட்ட, உயிர்தியாகம் செய்த அமைதிப் படை வீரர்களுக்கு புதிய நினைவுச் சுவர் அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் மகிழ்ச்சி. இந்த தீர்மானம் 190 நாடுகளின் ஆதரவை பெற்றுள்ளது. அனைவரின் ஆதரவுக்கும் நன்றி" என தெரிவித்துள்ளார்.



## முத்துசாமிக்கு மதுவிலக்கு, தங்கம் தென்னரசுக்கு மின் துறை அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஆளுநருக்கு முதல்வர் பரிந்துரை

சென்னை , ஜுன். 16–

நிதியமைச்சர் தங்கம் தென்னரசுக்கு மின்சாரத் துறையையும், வீட்டு வசதித் துறை அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் கூடுதலாக ஒதுக்கீடு செய்து, அமைச்சரவையில் மாற்றம் செய்ய ஆளுநருக்கு முதல்வர் ஸ்டாலின் பரிந்துரைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையான அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு அறுவை சிகிச்சை செய்ய இருப்பதால், அவர் வகித்து வந்த இரண்டு துறைகளை மற்ற அமைச்சர்களுக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்ய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, தமிழக நிதி அமைச்சராக இருந்துவரும் தங்கம் தென்னரசுக்கு கூடுதலாக மின்சாரத் துறையையும், வீட்டு வசதித் துறை அமைச்சராகஇருந்துவரும் முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் வழங்க முதல்வர் முடிவெடுத்துள்ளதாக, தகவல் வெளியாகி இருக்கிறது.

அமைச்சர் செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகவும், தங்கம் தென்னரசுக்கு மின்சாரத் துறையையும், முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆளுநருக்கு பரிந்துரைத்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக, சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் தமிழக மின்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சூழலில், அவரது நீதிமன்றக் காவலை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது. ஏற்கெனவே நீதிமன்றக் காவல் வழங்கப்பட்டுவிட்டதால் அதை ரத்து செய்ய முடியாது எனக் கூறி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள முதல்வரின் இல்லத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், மூத்த அமைச்சர்கள், செந்தில்பாலாஜி வகித்து வரும்துறைகளை யாரிடம் பிரித்துவழங்குவதுஎன்பது குறித்து புதன்கிழமை ஆலோசனைநடைபெற்றது குறிப்பிடத்தக்கது.





# இன்று

16-6-23

கரிநாள்

மாத சிவராத்திரி

உடல் பலவீனம் நீங்க பப்பாளி பழம் தொடர்ந்து சாப்பிடவும்.
சக வருடம் 1945 ஜ்யேஷ்டம் 26

| சோபகிருது ஆனி 1 | JUN - FRI வெள்ளி | துல்கஃதா 26 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 167 / 198 | |

தேய். திரயோதசி 09.33 (கா. 09.43) கார்த்திகை 25.50 (மா. 04.14) தியாஜ் 00.00 அகஸ் 31.29 சித்த 25.50 மேல் மரண. மாத சிவராத்திரி. கரிநாள். பட்டீஸ்வரம் தேனுபுரீஸ்வரர் முத்து பந்தல் அருளியலீலை. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் புறப்பாடு. திருத்தணி ஸ்ரீமுருகப்பெருமான் கிளி வாகன சேவை.

| | நல்லநேரம் | கௌரி நல்ல நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.30-10.30 | 12.30-1.30 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.30-5.30 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம். மிதுன லக்னம் இருப்பு நா. 5 வி. 15. சந்திராஷ்டமம் சித்திரை சுவாதி. கரணம் : 1.30-3. சூரிய உதயம் : 5.54.

நம்புகிறவனே நிச்சயம் வெற்றி பெறுகிறான்

இராசிபலன்: மேஷம் - பகை; ரிஷபம் - நட்பு; மிதுனம் - செலவு; கடகம் - உற்சாகம்; சிம்மம் - நன்மை; கன்னி - விருத்தி; துலாம் - உழைப்பு; விருச்சி - நற்செயல்; தனுசு - அமைதி; மகரம் - ஆதாயம்; கும்பம் - லாபம்; மீனம் - ஆக்கம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

சோகங்கள் நமக்குச் சொந்தமானது அல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்வதும் தகர்த்தெறிவது அவரவர் துணிவில் தான் இருக்கிறது.






# 61 நாள் மீன்பிடி தடைகாலம் நிறைவடைந்து படகுகளுக்கு பூஜை போட்டு ஆழ்கடலுக்கு பணிக்கு திரும்பிய மீனவர்கள்



சென்னை, ஜூன்- 16

61 நாள் மீன்பிடி தடைகாலம் கடந்த ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது.

மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டும், கடலில் மீன் வளத்தை பாதுகாக்கும் நோக்கத்துடனும், சென்னை காசிமேடு முதல் கன்னியாகுமரி வரை மீன்பிடி தடைக்காலம் ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு கடந்த ஏப்ரல் மாதம் 15-ந் தேதி முதல் ஜூன் மாதம் 14-ந் தேதி வரை 61 நாட்கள் வரை மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டது.

இந்த மீன்பிடி தடைக்காலத்தில் ஆழ்கடலுக்கு சென்று மீன்பிடி தொழில் செய்யும் விசைப்படகுகள், இழுவை படகுகள் ஆகியவை மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட எல்லை வரை சிறியவகை படகுகள் மூலம் மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வந்தனர். இந்தநிலையில் மீன்பிடி தடைக்காலம் நேற்று முந்தினம் முடிவுக்கு வந்தது. இதன் காரணமாக நேற்று படகுகளுக்கு பூஜை செய்து மீண்டும் மீன்பிடிக்க மீனவர்கள் உற்சாகமாக கடலுக்கு சென்றனர்.

சென்னை காசிமேடு, நாகப்பட்டினம் உள்ளிட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். ஒருவாரம் கடலில் தங்கி மீன்பிடிக்க தேவையான உணவு பொருட்கள் மற்றும் மீன்களை பதப்படுத்த ஐஸ் கட்டிகள், டீசல், மீன்பிடி வலைகள் உள்ளிட்ட மீன்பிடி சாதனங்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் படகுகளில் வைத்துள்ளனர்.

# அழகை இழந்துவரும் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த அமராவதி அணைப் பூங்கா



உடுமலை ,ஜூன்.16-

உடுமலை அருகே 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த அமராவதி அணைப் பூங்கா பராமரிப்பின்றி பாழடைந்து வீணாகி வருகிறது.

திருப்பூர் மாவட்டம் உடுமலையில் இருந்து சுமார் 20 கிமீ தொலையில் உள்ளது அமராவதிஅணை. கடந்த 1958-ல் அன்றைய முதல்வர் காமராஜரால் இந்த அணை கட்டப்பட்டது. அணை உருவானபோதே அணையின் முகப்பில் வலது, இடது பகுதிகளில் உள்ள காலியிடம் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பூங்காவாக அமைக்கப்பட்டது.

அணைக்கு எதிரே சிறுவர் விளையாட்டு பூங்காவும், மிருக காட்சி சாலையும் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா சுமார் ஒரு கிலோமீட்டர் நீளமும், 60 மீட்டர் அகலமும் கொண்டதாகும். பூச்செடிகள், நடைபாதைகள், செயற்கை நீரூற்றுகள், புல் தரைகள், விலங்குகளின் சிலைகள், நிழல் தரும் மரங்கள் என ரம்மிய மான சூழலுடன் பூங்கா ஏற்படுத்தப்பட்டது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், புதுச்சேரி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள், அமராவதி அணைக்கு வந்து செல்கின்றனர். சுற்றுலா பயணிகளுக்கு நுழைவுக் கட்டணமாக தனி நபருக்கு ரூ.5, இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.10, கார்களுக்கு ரூ.25, கனரக வாகனங்களுக்கு ரூ.50 என நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இதனால் ஆண்டுக்கு ரூ.20 லட்சம் வரை வசூலாகிறது. பல ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாததால் பூங்கா, பாலைவனமாக மாறியுள்ளது. தற்போதைய நிலையில், சவுக்கு, அசோக மரம், யூகலிப்டஸ் உள்ளிட்ட மரங்களும், வேலிச் செடிகளும் நிரம்பியுள்ளன. செயற்கை நீரூற்றுகள் துருப்பிடித்த நிலையிலும், செயற்கை புல் வளர்ப்புகள் காடுகளைப்போலவும் மாறியுள்ளன.

பயணிகள் அமரும் இருக்கைகள் சிதைந்தும், சிலைகள்சிதிலமடைந்தும் உள்ளன. விளையாட்டு உபகரணங்கள் துருப்பிடித்து பழுதடைந்துள்ளன. மிருகக்காட்சி சாலையில் இருந்த மான்,புறாக்கள், வெள்ளை எலி, வாத்து ஆகியவற்றை பராமரிக்க முடியாமல் வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்து பொதுப் பணித்துறை அதிகாரிகள் கூறும்போது, ''பழமை வாய்ந்த இப்பூங்காவை புனரமைப்பு செய்ய 4 ஆண்டுகளுக்கு முன்பே ரூ.1.60 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு அரசின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் எந்த நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப் படவில்லை. கலைஞர் நூற்றாண்டு விழா திட்டத்தின் கீழ் பூங்கா பராமரிப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்ய கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்த உடன் புனரமைப்பு பணிகள் நடைபெறும்” என்றனர்.








▶ மதுரை பைபாஸ் ரோட்டில் "ஃபர்ஸ்ட் க்ரை டாட் காம்" குழந்தைகள் ஷோரூம், 2வது கிளை திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் சோமு திறந்து வைத்தார். இந்த ஷோரூமில் குழந்தைகளுக்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும், ஷோரூம் திறப்பு விழாவில் கிளை மேலாளர்கள் ராய், ஸ்வீட்டன் பால், இர்பான் மற்றும் சஞ்சீவ், கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



▶ தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக மூன்றாவது முறையாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள ஏ.கே.எஸ். விஜயனை நேரில் சந்தித்து தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சங்கரன்கோவில் சட்டமன்றத் உறுப்பினருமான ராஜா ஈஸ்வரன் எம்எல்ஏ வாழ்த்து தெரிவித்தார்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் தாலுகா மீமிசல் நியூ சங்கீத் பள்ளியில் 2019-2020 கல்வி ஆண்டில் பயின்ற மாணவன் செய்யாணம் கீழ ஏம்பல் பகுதியைச் சேர்ந்த கெல்மத் இந்திய விமானப் படையில் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். மாணவர் கெல்மத்துக்கு. பள்ளியின் தாளாளர் ராமசாமி பணிநியமனத்திற்கான ஆணையை வழங்கி வாழ்த்தி கௌரவித்தார்.

# கீரனூர் அரசு பள்ளியில் மரக்கன்று நடவு விழா



கீரனூர் ,ஜூன்.16-

கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் சாலை செந்தில் கலந்து கொண்டு புவி வெப்பமயமாதலை தடுக்கும் நோக்கத்தில் மரங்களின் அவசியத்தை மாணவர்களுக்கு உணர்த்தும் விதமாக பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தினார்.

மரமடக்கி பள்ளி தலைமையாசிரியர் முருகன் கலந்து கொண்டு மாணவர்கள் தங்களின் வீட்டில் மரக்கன்றுகளை வளர்க்க அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் தலைமையாசிரியர் பரிமளம், ஆசிரியர்கள் கே.ஆர்.இரமேஷ், பாலக்குமார், கபிரியேல் கலந்து கொண்டனர். ஆசிரியர் சோலைமுத்து ஒருங்கிணைத்தார். 67 மாணவர்கள் விழிப்புணர்வு பெற்று பயனடைந்தனர்.

# அரியலூர் மாவட்டம் செந்துறையில் ஜமாபந்தி நிறைவு



அரியலூர், ஜூன். 16-

செந்துறையில் ஜமாபந்தி நிறைவடைந்தது.

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா அலுவலகத்தில், தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்ற, ஜமாபந்தி எனப்படும் வருவாய் தீர்ப்பாயத்தை, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம் நடத்தி வைத்தார். செந்துறை தாசில்தார் பாக்கியம் விக்டோரியா முன்னிலையில் நடைபெற்ற இந்த ஜமாபந்தியில், செந்துறை, பொன்பரப்பி, மாத்தூர் ஆகிய பிர்காக்களுக்கு உட்பட்ட, வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், தங்களது சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கு மனு கொடுத்து தீர்வு கண்டனர்.

தொடர்ந்து ஜமாபந்தி நிறைவு நாளில், விவசாயிகள் மாநாடு நடைபெற்றது. இதில் வருவாய் ஆய்வாளர்கள் செந்துறை சத்தியா, பொன்பரப்பி சாமிதுரை, மாத்தூர் கார்த்திக், மண்டல தாசில்தார் ராமலிங்கம், செந்துறை கிராம நிர்வாக அலுவலர் வாழவந்தான் மற்றும் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




▶ மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட டிரான்ஸ் கதீட்டர் மிட்ரல் வால்வ் பழுது நீக்கல் இவ்விரு மருத்துவ செயல் முறையை சென்னைக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் இந்த மருத்துவமனையில் செயல்படுத்துவது இதுவே முதன்முறையாகும், ஒரு பெண்மணியின் உயிரை காப்பாற்றுவதற்காக மித்ராகிளிப் செயல்முறை என ஒரு புதுமையான அணுகுமுறையை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவர் குழு வெற்றிகரமாக பயன்படுத்தி இருக்கிறது. இதைப் பத்திரிகையாளர்களிடம் முதுநிலை சிகிச்சை நிபுணர் டாக்டர். சிவக்குமார், இதயவியல் துறையின் தலைவர் டாக்டர். கணேசன், டாக்டர். செல்வமணி, முதுநிலை டாக்டர். சம்பத், டாக்டர். ஜெயபாண்டியன், மயக்க மருத்தியில் துறைத்தலைவர் டாக்டர். குமார், அறுவை சிகிச்சை டாக்டர். கிருஷ்ணன், முதுநிலை டாக்டர் ராஜன், மருத்துவ இயக்குநர் குடல், இரப்பை அறுவை சிகிச்சை துறையின் தலைவர் டாக்டர். ரமேஷ் அர்த்தநாரி, டாக்டர். கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

# டிஎன்பிஎஸ்சி குரூப் 4 காலிப் பணியிடங்களை 20,000 ஆக உயர்த்தி கலந்தாய்வு நடத்த வேண்டும் முதல்வருக்கு மார்க்சிஸ்ட் கட்சி கடிதம்



சென்னை, ஜூன்.16-

டிஎன்பிஎஸ்சி குரூப் 4 காலிப்பணியிடங்களை 20,000 ஆக உயர்த்தி கலந்தாய்வு நடத்த வேண்டும் என்று முதல்வருக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடிதம் எழுதியுள்ளது.

டிஎன்பிஎஸ்சி குரூப் 4 காலிப்பணியிடங்கள் தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது,"கரோனா தொற்று காரணமாக 2019, 2020, 2021 ஆகிய மூன்று ஆண்டுகளில் டிஎன்பிஎஸ்சி மூலம் எந்த தேர்வும் நடைபெறவில்லை. கரோனா தொற்று குறைந்த பிறகு கடந்தாண்டு தாங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு டிஎன்பிஎஸ்சி அட்டவணை வெளியிடப்பட்டு Group -1, Group - 2, Group 2-A, Group - 4 ஆகிய தேர்வுகள் நடத்தப்பட்டன. Group 4 தேர்வு கடந்த ஆண்டு நடைபெற்றது. அதற்கான தேர்வு முடிவு இந்த ஆண்டு வெளியிடப்பட்டது. Group - 4க்கான காலிப் பணியிடங்கள் 10,117 என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு 10,000 என்கிற அளவில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வந்தன. கடந்த மூன்று ஆண்டுகளாக கரோனா தொற்றின் காரணமாக தேர்வுகள் நடத்தப்படாமல், கடந்த ஆண்டுதான் தேர்வு நடத்தப்பட்டு இந்த ஆண்டு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் தேர்வுகள் நடத்தப்படாத காரணத்திலும், ஓய்வு பெற்றோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், கரோனா ஊரடங்கு காலத்தில் வேலைவாய்ப்பினை இழந்த இளைஞர்கள் அரசுப் பணிக்கு முயற்சித்து வருவதாலும் போட்டித் தேர்வர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தற்பொழுது விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 24 லட்சத்துக்கு அதிகமாகவும் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 18 லட்சத்துக்கு அதிகமாகவும் உள்ளது.

அரசுப்பணியில் சேர இளைஞர்களுக்கான பிரதான வாய்ப்பாக இருப்பது டிஎன்பிஸ்சிதான். கரோனா காலத்தில் அறிவிக்கப்படாத பணியிட வாய்ப்புகள் மற்றும் உருவாகியிருக்கும் கூடுதல் காலிப் பணியிடங்களையும் கணக்கில் கொண்டால் தற்போது மூன்றரை லட்சத்துக்கு மேல் காலிப் பணியிடங்கள் உள்ளன. இதை தற்போது அறிவிக்கப்பட்ட காலிப் பணியிடங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மூன்று சதவிகிதத்துக்கும் குறைவாகவே உள்ளது என்பதை தங்களது கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் தமிழகத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களான மின்சாரம், போக்குவரத்து, ஆவின் போன்ற துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள் டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்பப்படும் என்ற அறிவிப்பு போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால், சமீபத்தில் குரூப் 4 தேர்வுக்கான காலிப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டதில் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்கள் இடம் பெறவில்லை என்பது அந்த இளைஞர்களுக்கு ஏமாற்றத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தமிழக முதல்வர், தமிழகத்தில் 3.5 லட்சத்துக்கும் மேல் காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில், கரோனா காலத்தில் அறிவிக்கப்படாத பணியிட வாய்ப்புகள் மற்றும் உருவாகியிருக்கும் கூடுதல் காலிப்பணியிடங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அனைத்து காலிப் பணியிடங்களையும் பூர்த்தி செய்யும் வகையில் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளை எதிர்காலத்தில் நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அதேசமயம், தற்போது அறிவிக்கப்பட்டு கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ள 10,000 காலிப்பணியிடங்களை குறைந்தபட்சம் 20,000 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என அறிவித்து அதற்கான கலந்தாய்வை இந்த ஆண்டே நடத்தி தேர்ச்சி பெற்றவர்களுக்கு உடனடியாக பணி வழங்கிட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# தமிழக முதல்வர் ஸ்டாலினின் செயல்பாடுகள் பந்தத்தை விட பணமே முக்கியம் என்பது போல் உள்ளது தமாகா



சென்னை , ஜூன்.16-

“2 ஜி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு தனது சகோதரி கனிமொழி கைது செய்யப்பட்டபோது துடிக்காத முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டபோது மட்டும் துடிப்பது ஏன்?” என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணி தலைவர் எம்.யுவராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “செந்தில்பாலாஜி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த சமயத்தில் போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கி தருவதாக பலரிடம் பண மோசடி செய்ததாக அமலாக்கத் துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அமைச்சர் செந்தில்பாலாஜி மீதான குற்றச்சாட்டுகள் சரியானவை என உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. இந்நிலையில், அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் அவருடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருடைய வீடுகளில் அமலாக்கத் துறையினர் சோதனை மேற்கொண்டனர். நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி வருமான வரித் துறை, அமலாக்கத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழக முதல்வர் ஸ்டாலினின் செயல்பாடுகள் பந்தத்தை விட பணமே முக்கியம் என்பது போல், 2ஜி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு தனது சகோதரி கனிமொழி கைது செய்யப்பட்டபோது துடிக்காத முதல்வர், அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டபோது மட்டும் துடிப்பது ஏன்? ஊழல் குற்றச்சாட்டுக்களில் ஈடுபடுவோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து கைது நடவடிக்கையில் ஈடுபடுவது வழக்கம். இந்திய திருநாட்டையே உலுக்கிபோட்ட 2ஜி வழக்கில் மிகப்பெரிய அளவில் ஊழல் செய்து தனது சொந்த சகோதரியான திமுகவின் மகளிர் அணி தலைவியும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, கருணாநிதி இருக்கும்போதே கடந்த 2011-ம் ஆண்டு சென்னை திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் டிவி அலுவலகத்தில் சிபிஐ அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு பிறகு கைது செய்தனர். அப்போது நீங்கள் மத்தியில் ஆண்ட காங்கிரஸோடு கூட்டணி மந்திரி சபையில் இருந்தீர்கள். அப்போது ஜனநாயகம் இருந்தது? ஆனால், இப்போது ஜனநாயகம் இல்லையா? இதற்கு ஸ்டாலின் பதில் கூறுவாரா?

தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக மின்சாரத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜியை அமலாக்க துறையினர் கைது செய்யும்போது மட்டும் பதற்றப்படுவதும் துடிப்பதும் ஏன்? செந்தில்பாலாஜி வாய் திறந்து ஏதாவது கூறிவிட்டால், தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில்தான் முதல்வரும், அமைச்சர்களும் இன்று பதறிப்போய், ஓடோடி சென்று செந்தில்பாலாஜியை பார்க்கின்றனர், கண்டன அறிக்கை எல்லாம் விடுகிறார். எந்த ஆவணங்களை கைப்பற்றினாலும், அதற்கு விளக்கம் தருவேன் என்று கூறிய செந்தில்பாலாஜி, விளக்கத்தை தந்துவிட்டு செல்ல வேண்டியதுதானே. எதற்கு இந்த ஆர்ப்பாட்டம்?

தலைமைச் செயலகத்தில் கடந்த 2016-ம் ஆண்டு வருமான வரித் துறை சோதனை நடத்தியபோது, ‘தமிழகத்திற்கு தலைகுனிவு’ என்றார் ஸ்டாலின். இப்போது, தலைமைச் செயலகத்தில் அமைச்சர் அறையில் அமலாக்கத் துறை சோதனை நடத்தி இருப்பதுதான் தமிழகத்துக்கே பெரும் தலைகுனிவு. செந்தில்பாலாஜி வீட்டில் ரெய்டு நடத்த சென்ற அதிகாரிகள் தாக்கப்பட்டபோது திமுக கூட்டணி கட்சி தலைவர்கள் எங்கு போனார்கள்? ஆனால் இன்று அத்துமீறல், மனித உரிமை மீறல் என குரல் கொடுக்கிறார்கள். வருமான வரித்துறை அதிகாரிகள் தாக்கப்பட்ட விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் செந்தில்பாலாஜியை உத்தமர் போல் சித்தரிப்பதை தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞர் அணி வன்மையாக கண்டிக்கிறது” என்று அவர் கூறியுள்ளார்

# தேரழுந்தூர் கம்பர் கோட்டத்தில் கட்டிட மேம்பாட்டு பணிகளை குத்தாலம் சேர்மன் நேரில் ஆய்வு



குத்தாலம், ஜூன்- 16

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா, தேரழுந்தூர் ஊராட்சியில் புகழ்பெற்ற கம்பராமாயணம் தந்த கம்பரை போற்றும் வகையில் கம்பர் கோட்டம் உள்ளது. இதில் திருமண மண்டபம், நூலகம் உள்ளிட்ட கட்டிடங்கள் அமைந்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி கடந்த மாதம் கம்பர் கோட்டத்தை நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது அடிப்படை தேவைகளை மேம்படுத்தி மறு சீரமைப்பு செய்ய வேண்டும் என அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியரின் ஆணைக்கிணங்க கம்பர் கோட்டம் கட்டிடம் மேம்பாட்டு சீரமைப்பு அடிப்படை வசதிகள் உள்ளிட்டவைகளை குறித்து குத்தாலம் ஒன்றிய குழு தலைவர் மகேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கஜேந்திரன், உமாசங்கர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்ட ஆய்வு மேற்கொண்டனர் மேலும் கிராம நிர்வாகிகளிடம் கம்பர் கோட்டத்தின் விவரங்களை கேட்டுக் கொண்டனர் இந்த ஆய்வின்போது தேரழுந்தூர் கம்பர் கழக செயலாளர் ஜானகிராமன், திமுக நிர்வாகிகள் தங்க ரவீந்திரன், சஞ்சய் வெங்கட்ராஜ், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், திமுக மாவட்ட பிரதிநிதிகள் பலர் உடன் இருந்தனர்

# துபாயில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மயிலாடுதுறை சமூக சேவகருக்கு மனிதநேய மாண்பாளர் விருது



துபாய், ஜூன்-16:

ஐக்கிய அரபு அமீரகம் துபாயில் அறந்தாங்கி அசோசியேசன் AIM சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மனிதநேய மாண்பாளர் விருதினை மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மானுக்கு வழங்கினர்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அயோத்தி திரைப்பட இயக்குனரும் நடிகருமான சசிகுமார், க.பெ ரணசிங்கம் படத்தின் இயக்குனர் விருமாண்டி, தவம் படத்தின் தயாரிப்பாளர் காதர், பட்சா முத்துராமலிங்கம் படத்தின் நடிகர் வாசி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டு பல்வேறு நற்பணிகளில் சிறப்பாக ஈடுபட்டுவருபவர்களுக்கு விருதுகளை வழங்கினர்.

நிகழ்ச்சியினை அறந்தாங்கி AIM மன்றத்தின் அமீரக ஒருங்கிணைப்பாளர் சேக் அப்துல்லா கனி தலைமையில் ஏற்பாடு செய்திருந்தார். அறந்தாங்கி சேக் அப்துல்லா கனி, ஐக்கிய அரபு அமீரகம் துபாய் அரசின் அனுமதிபெற்ற துபாய் ஈமான் கலாச்சார அமைப்பின் பொதுச்செயலாளர் ஹமீது யாசின் மற்றும் துபாய் ஈமான் நிர்வாகிகள் உள்ளிட்டோர் இரவு பகல் பாராது அயராது ஈமான் கலாச்சார மையத்தின் மேம்பாட்டுக்காக சமூக நலன் மனிதநேய பணிக்காக அயலக தமிழர்களுக்காக உழைத்து வரும் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மான் நன்றி தெரிவித்துள்ளார்.

### ஊத்துக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி நிறைவுவிழாவில்

# ரூ.2,21,94,868 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு கலெக்டர் வழங்கினார்



ஊத்துக்கோட்டை, ஜூன்16–

வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மீட்பு பணிகள் துறை வருவாய் தீர்வாயம் சார்பாக திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுகாவில் கடந்த 6-ம் தேதி ஜமாபந்தி நிகழ்ச்சி துவங்கி நேற்று நிறைவு பெற்றது. இதில், இணைய வழிபட்டா, இலவச வீட்டு மனை பட்டா, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகை, புதிய மின்னணு குடும்ப அட்டை, இந்து-இருளர் பழங்குடியினர் நல வாரிய அட்டை, வாரிசு சான்று, விதவை சான்று, சிறு விவசாயி சான்று, உட்பிரிவு பட்டா மாறுதல், முழு புலம் பட்டா மாறுதல் என மொத்தம் 313 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே,21 லட்சத்து,94ஆயிரத்து 868 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு, திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ஆல்பிஜான்வர்கீஸ் தலைமை தாங்கி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். சப்-கலெக்டர் (பயிற்சி) சுபலட்சுமி முன்னிலை வகித்தார். தனி வட்டாட்சியர் லதா, வட்ட வழங்கல் அலுவலர் ரவி, கிராம நிர்வாக அலுவலர் சுந்தர்ராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊத்துக்கோட்டை பேரூர் கழகச் செயலாளர் அபிராமி, பேரூராட்சிமன்ற தலைவர் அப்துல்ரஷீத், துணைத்தலைவர் குமரவேல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் வசந்தி வரவேற்றார். முடிவில், முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஹேமகுமார் நன்றி கூறினார்.

# உத்தரப்பிரதேசத்தில் தூங்கிக்கொண்டிருந்தபோது தீ விபத்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 குழந்தைகள் உள்பட 6 பேர் உயிரிழப்பு



உத்தரப்பிரதேசம், ஜூன்.16–

சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்து சடலங்களை மீட்டனர். முதல்வர் யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்ததுடன் ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் குஷிநகர் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சங்கீதா (38). இவருக்கு 10 வயது முதல் ஒரு வயதுக்குட்பட்ட 5 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில், சங்கீதாவும் அவரது 5 குழந்தைகளும் வீட்டிற்குள் தூங்கிக் கொண்டிருந்தனர். சங்கீதாவின் கணவர் மற்றும் மாமனார், மாமியார் ஆகியோர் வீட்டின் வெளியே படுத்துள்ளனர். அப்போது, திடீரென வீட்டின் தகரகொட்டகை மீது தீ பரவியுள்ளது. தீ மளமளவென பரவி வீடு முழுவதும் எரிந்துள்ளது. இதை கண்டு அதிர்ந்த சங்கீதாவின் கணவர் மற்றும் குடும்பத்தினர் உள்ளே சென்று குடும்பத்தினரை காப்பாற்ற முயன்றனர். ஆனால் அதற்குள் சிலிண்டர் வெடித்து வீட்டிற்குள் இருந்த சங்கீதா உள்பட 6 பேரும் தீயில் கருகி உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வந்து சடலங்களை மீட்டனர். மேலும், சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் நடத்திய முதற்கட்ட விசரணையில், குறைந்த மின் அழுத்தம் காரணமாக தீ பிடித்துள்ளது என்றும் பின்னர் தீ பரவியதில் சிலிண்டர் வெடித்து சிதறியதும் தெரியவந்துள்ளது. இதைதொடர்ந்து, தீ விபத்தில் உயிரிழந்த சங்கீதா மற்றும் அவரது குழந்தைகளின் மறைவுக்கு அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் இரங்கல் தெரிவித்ததுடன் ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.



▶ புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் நேற்று பள்ளிகள் துவங்கிய நிலையில் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள வி.சி.ஒ. அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் கோட்டுச்சேரி அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா அப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு சீருடை மற்றும் தையற் கூலி வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் மேல்நிலை கல்வி துணை இயக்குநர் ராஜேஸ்வரி பள்ளி துணை முதல்வர் கனகராஜ் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்திற்கு உட்பட்ட மேலகாசாகுடி கிராமம் தென்பாதி பேட் உட்புறச் சாலையை மேம்படுத்துதல் மற்றும் பள்ளத்தெரு பேட் இடுகாட்டு பகுதிக்கு சாலை அமைத்தல் பணிக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல சிறப்பு குழு நிதியிலிருந்து ரூபாய் 21,00,000 இலட்சம் செலவில் சாலை அமைப்பதற்கான பூமி பூஜையை நேற்று காலை போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



▶ புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் ஒதுக்கப்படும் சிறப்பு கூறு நிதியை செலவிடுவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஆதிதிராவிடர் நலன் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை, மின்துறை, விவசாயத்துறை, சுகாதாரத் துறை, நலவழித்துறை, சமூகநலத்துறை உள்ளிட்ட இந்த நிதியில் பயன்பெறும் 21 துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இந்தத் துறைக்கு இந்த பட்ஜெட்டில் புதுவைக்கு மொத்தம் 441 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இதில் காரைக்காலுக்கு மட்டும் 61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என இத்துறையின் உதவி இயக்குனர் தெரிவித்தார்கள். . மேலும் இந்நிகழ்வில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உதவி இயக்குனர் மதன்குமார் மற்றும் துணை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

# நாகையில் நடுக்கடலில் 2 விசைப்படகுகள் கவிழ்ந்து விபத்து – 7 மீனவர்கள் மீட்பு



நாகை, ஜூன்.16–

நாகையில் நடுக்கடலில் 2 விசைப்படகுகள் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

மீன்பிடி தடைக்காலம் முடிவடைந்தது 2 மாதங்களுக்கு பிறகு தமிழகத்தில் மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க விசைப்படகுகளில் புறப்பட்டு சென்றனர். அதன்படி நாகை, மயிலாடுதுறை, தஞ்சை மாவட்ட மீனவர்கள் நேற்று முதல் மீன்பிடிக்க சென்றனர்.

நாகை, வேதாரண்யம், தரங்கம்பாடி, பூம்புகார், சீர்காழி, மல்லிப்பட்டினம், அதிராம்பட்டினம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 5000–க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள் நள்ளிரவில் கடலுக்குச் சென்றனர். நாகை துறைமுகத்தில் இருந்து 100–க்கணக்கான விசைப்படகுகளுக்கு பூஜை செய்தும், கடலை வழிபட்டும் பின்னர் சென்றனர். இயந்திரம் பழுது நீக்கம் செய்யப்பட்டு வர்ணம் தீட்டி புது பொலிவுடன் படகுகள் சென்றன.

இந்த நிலையில், நேற்று நாகையில் நடுக்கடலில் 2 விசைப்படகுகள் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. நாகைக்கு நேர் கிழக்கே 10 நாட்டிக்கல் மைல் தொலைவில் கடலில் மூழ்கியது. கீச்சாங்குப்பத்தை சேர்ந்த 7 மீனவர்கள் சுமார் 3 மணி நேரம் நடுக்கடலில் தத்தளித்தனர். உயிருக்கு போராடிய 7 மீனவர்கள் சக மீனவர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். 4 பேர் ஆபத்தான நிலையில் நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது, மேலும் கடலில் கவிழ்ந்த விசைப்படகுகளை மீட்கும் பணியில் 2 பைபர் படகுகள், 12 மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

# வேப்பம்பட்டு ஸ்ரீ ராம் கல்விக்குழும வளாகத்தில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்



திருவள்ளூர், ஜூன், 16 -

திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டிலுள்ள ஸ்ரீ ராம் கல்விக்குழும வளாகத்தில் ஸ்ரீ ராம் கல்வி அறக்கட்டளை மற்றும் எக்யுடாஸ் வளர்ச்சி நிறுவன அறக்கட்டளை சார்பில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஸ்ரீ ராம் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் ராஜ்குமார் மற்றும் எக்யுடாஸ் வளர்ச்சி நிறுவன அறக்கட்டளையின் துணை அதிபர் கே.கிறிஸ்டோபர் ஜெயராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர். விஞ்ஞானியும் CVRD, DRDO வில் இயக்குனருமான எம். சீனிவாசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இம்முகாமில் 42 நிறுவனங்கள் பங்கேற்று, நேர்காணலில் கலந்து கொண்ட 300 மாணவ / மாணவியர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 63 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

ஸ்ரீ ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் டி.சரவணன் வரவேற்புரையாற்றினார். ஆங்கில துறைத்தலைவர் முனைவர் டி.கோமதி நன்றியுரையாற்றினார். விழாவின் ஒருங்கிணைப்பாளர்களான ஸ்ரீ ராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் முனைவர். டி.தமிழ் வேந்தன், எக்யுடாஸ் பிரதிநிதிகளான குணசேகர், காந்தி ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

### ராள்ளபாடி அருள்மிகு ஸ்ரீசாய்பாபா திருக்கோவிலின்

# 5–ம் ஆண்டு வருடாபிஷேக விழா: 108 பால்குட ஊர்வலம்–சிறப்பு பூஜைகள் நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஜூன்16–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருகே குமரப்பேட்டை ஊராட்சியில் ஆரணி-பெரியபாளையம் நெடுஞ்சாலையில் ராள்ளாபாடி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீசாய்பாபா திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில், 5-ம் ஆண்டு வருடாபிஷேக விழா நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றது.

நேற்று காலை ஆறு மணிக்கு மங்கள வாத்தியத்துடன் காகட ஆரத்தி நடைபெற்றது. இதன்பின்னர், குமரப்பேட்டை அருகே அஞ்சாத்தம்மன் கோவிலில் இருந்து மேளதாளங்கள் முழங்க 108 பால்குடங்களை சுமந்த வண்ணம் விரதம் இருந்த பக்தர்கள் ஊர்வலமாக கோவிலை வந்தடைந்தனர். பின்னர், பக்தர்கள் தங்களது கையால் மூலவர் அருள்மிகு ஸ்ரீசாய்பாபாவிற்கு பாலாபிஷேகம் செய்து வழிபட்டனர். இதைத் தொடர்ந்து கணபதி ஹோமம், 108 தாமரை குபேர மகாலட்சுமி ஹோமம், தீர்க்க ஆயுள் வேண்டி ஆயுஷ் ஹோமம், சாய்பாபா திருவருள் வேண்டி மூல மந்திர ஹோமம், நவகிரக சாந்தி பரிகார ஹோமம், நட்சத்திர ராசி பரிகார ஹோமம், மகாபூர்ணகுதி உள்ளிட்டவை நடைபெற்றது.

பின்னர், சந்தோஷ்குமார், பாலாஜி ஆகிய ஐயர்கள் தலைமையில் புனித நீர் அடங்கிய கலசங்கள் பிரகார புறப்பாடு நடைபெற்றது. பின்னர், மூலவர் அருள்மிகு ஸ்ரீ சாய்பாபாவிற்கு புனித நீர் ஊற்றி மகா அபிஷேகம் செய்தனர். பின்னர், மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதை தொடர்ந்து கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை பல்லக்கி சேவை, இரவு 8 மணிக்கு இரவு ஆரத்தி உள்ளிட்டவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தொழில் அதிபர் எம்.ஆர்.தென்னரசு, கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கே.வி.ஆனந்தகுமார், சுண்ணாம்புகுளம் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.எம். ரவி உள்ளிட்ட ஏராளமான முக்கிய பிரமுகர்களும், சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்களும் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதயகுமார் தலைமையில் ஸ்ரீசிவசாயி சேவா அறக்கட்டளை நிர்வாகிகளும், பக்தர்களும், பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு மகளிர் பள்ளியில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு விழா



புதுக்கோட்டை, ஜூன்.16–

புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலம் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது, பள்ளியின் தலைமை ஆசிரியர் சு.சரிதா தலைமையுரையாற்றினார், கவிஞர் தங்கம்மூர்த்தி விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகள், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களை பாராட்டி, சிறப்பாக உரையாற்றி அனைவரையும் ஊக்குவித்தார்.

மாணவிகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கூறியபடி நடந்தால் வாழ்வில் நிச்சயமாக வெற்றி பெற இயலும் என்றும், அரசு பள்ளிகளில் சாதனை புரிந்த மாணவர்களைப் போல ஒவ்வொருவரும் வரவேண்டும் என்றும், இக்கால சாதனையாளர்கள் பெண்களே, நீங்களும் சாதனையாளர்களாக ஆக வேண்டும் என்றும் ஊக்கப்படுத்தி அருமையான உரை ஆற்றினார். பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் அஞ்சலி தேவி தங்கம் மூர்த்தி பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலிடம் பெற்ற மாணவிகளுக்கு பரிசுத்தொகை மற்றும் நினைவுப்பரிசாக புத்தகங்கள் வழங்கிப்பாராட்டினார்.

பத்தாம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகள் ச.ஆஷிகாபர்வீன், ச.சுபிக்ஷா, கா.மகதிஸ்ரீ பன்னிரெண்டாம்வகுப்பில் முதல் இரண்டு இடங்களை பெற்ற மாணவிகள் ஐ.தேவதர்ஷினி, பொ.வைஷ்ணவி, இரண்டாம் இடம் கு.அருண் ஸ்ரீ, ஆசிரியை கீதா வரவேற்க, பள்ளியின் உதவித்தலைமை ஆசிரியர் பரமசிவம் நன்றி கூற நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது, நிகழ்வில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவிலில் சந்தன மாரியம்மன் திருக்கோவில் கொடை விழாவையொட்டி 11 ஆம் ஆண்டு கபாடி போட்டி



தென்காசி, ஜூன்.16–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட சந்தன மாரியம்மன் திருக்கோவில் கொடை விழாவை முன்னிட்டு மாவீரன் சுந்தரலிங்கனார் மற்றும் வவுனியா விளையாட்டு குழு சார்பில் மாநில அளவிலான 11 ஆம் ஆண்டு கபாடி போட்டி நடைபெற்றது.

கபாடி போட்டியில் ஊர் சமுதாய நாட்டாமைகள் மற்றும் மாடசாமி, சாமிதுரை, முத்து, காளிமுத்து, விக்னேஷ், சித்திரவேல், சீனி ஆகியோர் தலைமை வகித்தனர், அதிமுக நகர அவைத்தலைவர் வேலுச்சாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர், சிறப்பு அழைப்பாளராக பாரதிய ஜனதா கட்சி வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவின் மாநில துணைத்தலைவர் அ.ஆனந்தன் கலந்து கொண்டு விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைத்தார்.

விளையாட்டு போட்டி முடிவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளையும், கோப்பைகளையும் வழங்கினார், இந்நிகழ்ச்சியில் சங்கரன் கோவில் மாவட்ட துணை கண்காணிப்பாளர் சுதிர், சங்கரன்கோவில் நகர ஆய்வாளர் சண்முக வடிவு, மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பாஸ்கர் மதுரம், சங்கரன்கோவில் எம். ஏ சூசை, ஸ்ரீகுமார், பொன்னம்பலம், நெடுஞ்செழியன், கண்ணன் என்ற ராஜு ஆகியோர் கலந்து கொண்டனர். கபாடி போட்டியில் தமிழ்நாட்டில் இருந்து பிரபலமான 88 அணிகள் கலந்து கொண்டன, வெற்றி பெற்ற அணிகளுக்கு சுழற் கோப்பையும், ரொக்க தொகையும் வழங்கப்பட்டது.

# கந்தர்வக்கோட்டையில் உலக காற்று தினம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கடைப்பிடிப்பு



கந்தர்வக்கோட்டை, ஜூன்.16-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் சுத்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் உலக காற்று தினம் கடைபிடிக்கப்பட்டது,இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் கலையரசி தலைமை வகித்தார். அறிவியல் இயக்க வட்டாரத் தலைவர் ரகமதுல்லா, செயலாளர் சின்ன ராஜா ஆகியோர் கலந்து கொண்டு உலக காற்று தினம் குறித்து பேசியதாவது,

உலகக் காற்று நாள் ஆண்டுதோறும் ஜூன் 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இது காற்றாற்றலைக் கொண்டாடும் தினமாகும். மனித நாகரீகம் வளர வளர இயற்கையானது சீர்கேடு அடைந்து வருகிறது. உலகில் உயிர்கள் வாழ இன்றியமையாதது காற்று. எனினும், சில நேரங்களில் இந்த காற்று தனி உருவெடுத்து தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது. அதிதீவிர காற்று புயலாக மாறினால் ஆபத்து ஆதிக்கம் செய்யும் என்பதும் உண்மை.

சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை அமைச்சகம் சார்பில் 2014 இல் காற்று தரக் குறியீட்டு எண் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் தமது சுற்றுப்புறக் காற்றின் தரத்தினை எளிதில் அறியும் வண்ணம் ஒரே எண் ஒரே நிறம் ஒரே விளக்கம் என வரையறுக்கப்பட்டது.

தூய்மையான காற்று ஒரு மனிதனின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. மனிதன் உணவு இல்லாமல் கூட சில நாட்கள் வாழ முடியும். ஆனால், காற்று இல்லாமல் ஒரு நிமிடம் கூட வாழ முடியாது. மனிதனுக்கு மட்டுமல்ல, அனைத்து தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கும் காற்று மிகவும் அவசியமானதாகும். காற்று இல்லாமல் நாம் இல்லை. காற்று மாசை ஏற்பாடுத்தாமல் தவிர்ப்பதற்கு இந்நாளில் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். என்று பேசினார்கள் இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மேரிபுஷ்பம்,விஜயராணி, ரேவதி தன்னார்வலர்கள் காஞ்சனா, ராஜலட்சுமி, சித்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர் சங்க ஆர்ப்பாட்டம்




தென்காசி, ஜூன். 16-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய்த்துறை பதவி உயர்வு அலுவலர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திருப்பதி தலைமை வகித்தார், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார், மாவட்டத் தலைவர்கள் முருகேஷ், சின்னராஜ், செயலாளர் சேர்ம பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறும் கிராம நிர்வாக அலுவலர்களை பணியில் இளையோர்களான இளநிலை வருவாய் ஆய்வாளர் தட்டச்சர்களுக்கு பின்னர் வைத்து தமிழ்நாடு அரசு பணியாளர் சட்டம் பொருட்படுத்தாமல் முதுநிலை நிர்ணயம் செய்வதை திருத்தம் மேற்கொள்ளும்பொருட்டுமனிதவள மேலாண்மை துறையிலும் முதுநிலை தொடர்பாக விரைவில் தெளிவுரை பெற வலியுறுத்தியும் சென்னை வருவாய் நிர்வாக ஆணையரிடம் மாநில அளவிலான பெரும் திரள் முறையீடு செய்யப்பட்டதில் ஆணையரகத்தில் ஒரு மாத காலத்திற்குள் கோரிக்கை நிறைவேற்றி தருவதாக வைக்கப்பட்ட வாக்குறுதியினை விரைந்து செயல்படுத்த வலியுறுத்தியும்,பதவி உயர்வு பெறும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மட்டும் பாரபட்சமாக முதுநிலை நிர்ணயம் செய்வதை கைவிட்டு விரைவில் நீதி வழங்கிட வலியுறுத்தியும் பல்வேறு கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதில் திரளான கிராம நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட பொருளாளர் மாலதி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை வைரம்ஸ் பள்ளியில் இளநிலை மழலையர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா

புதுக்கோட்டை, ஜூ.16-

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில் நேற்று இளநிலை மழலையர்களுக்கான வகுப்புகள் திறக்கப்பட்டன, பெற்றோர்களையும் மாணவர்களையும் பள்ளிமாணவர்கள் டிரம்ஸ் வாசித்தும் கரவொலி எழுப்பியும் வரவேற்றனர், பள்ளியின் தலைவர் தேனாள் சுப்ரமணியன், பள்ளியின் நிர்வாக ஒருங்கிணைப்பாளர் அசுவினி நாச்சம்மை, பள்ளியின் முதல்வர் சீராஜுதீன் ஆகியோர் மழலைச் செல்வங்களின் விரல் பிடித்து நெல்லில் எழுத வைத்து எழுத்துப்பயிற்சியை தொடங்கி இனிப்புகள் வழங்கினர்.

பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளுடன் mom and me என்ற ஓவியத்தை palm art முறையில் தனது கைகளை வண்ண அச்சி எடுத்து மகிழ்ந்தனர். மழலைகள் தனது பள்ளிவாழ்க்கையில் முதல்அடி எடுத்து வைப்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் வகுப்பறைகளில் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்

# கடையநல்லூரில் தேவேந்திர குல வேளாளர் பட்டியல் வெளியேற்ற கோரிக்கையை வலியுறுத்தி மாபெரும் பொதுக்கூட்டம்



தென்காசி,ஜூன்.16-

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தேவேந்திர குல வேளாளர் பட்டியல் வெளியேற்ற கோரிக்கையை வலியுறுத்தி அகில இந்திய தேவேந்திர குல வேளாளர் முன்னேற்றச் சங்கம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் கடையநல்லூர் பள்ளிவாசல் திடலில் நடைபெற்றது.

இதில் தலைமை எம். முருகேசன் தென்காசி தெற்கு மாவட்டத் தலைவர், பா. கணேசன் மாவட்டச் செயலாளர், வரவேற்புரை முருகன் கடையநல்லூர் ஒன்றியச் செயலாளர், முன்னிலை கார்த்திக் பாண்டியன்ச் மாவட்ட இணைச் செயலாளர், ஜி. தமிழ்செல்வம் மாவட்ட இளைஞர் அணி தலைவர், எம். மகேஷ் குமார் மாவட்ட இளைஞரணி செயலாளர், ஜி. சரவணன் விஜயகுமார் இளைஞர் அணி செயலாளர், பி. ஜெயபாஸ்கர்மாவட்ட இளைஞர் அணி இணைசெயலாளர், எழுச்சி உரை தமிழின வேந்தர் பெ. ஜான் பாண்டியன் நிறுவனத் தலைவர், வியங்கோ பாண்டியன், மாநில இளைஞரணி தலைவர், சிறப்புரை எஸ். நெல்லையப்பன் மாநில துணை பொதுச்செயலாளர்கள், அருண் பிரின்ஸ், சண்முகசுதாகர், வி. சேகர் தலைமை நிலைய செயலாளர், மகேந்திரன் தொழிற்சங்க மாநில பொதுச் செயலாளர், ராமமூர்த்தி அனைவரையும் வரவேற்று நன்றியுரை ஆற்றினார்.



தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதியோர்களுக்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன் தலைமையில் எடுக்கப்பட்டது, இதில் மாவட்ட சமூக நல அலுவலர் மதிவதனா, திட்ட அலுவலர் முத்து மாரியப்பன், உதவி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராமசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருத்துறைப்பூண்டியில்

# நெல் ஜெயராமனின் தேசிய நெல் திருவிழா நாளை தொடங்குகிறது



திருத்துறைப்பூண்டி, ஜூன். 16-

ஆதிரெங்கம் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம் நடத்தும்உலகப்புகழ்பெற்ற திருத்துறைப்பூண்டி தேசிய நெல் திருவிழா மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா நாளை தொடங்குகிறது.

பாரம்பரிய நெல்லை பரவலாக்கம் செய்யும் முயற்சியாக மறைந்த இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரால் தொடங்கிவைக்கப்பட்டு மறைந்த பாரம்பரிய நெல் மீட்பாளர் நெல் ஜெயராமனால் நடத்தப்பட்டு வந்த நெல் திருவிழா இந்த ஆண்டு முன்னோடி இயற்கை விவசாயிகளின் தலைமையில் நடைபெற இருக்கின்றது. இவ்விழாவில் கருத்தரங்கம், நெல் கண்காட்சி, உணவு திருவிழா, கலை நிகழ்ச்சி ஆகியவை ஜூன் 17ஆம் தேதி சனிக்கிழமை தொடங்கி 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வரை திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஏ ஆர் வி தனலட்சுமி திருமண அரங்கத்தில் நடைபெற உள்ளது.

சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தமிழக இயற்கை உழவர் இயக்கம் மாநில செயலாளர் முருகையன் தலைமையில் பேரணியை விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் பி.ஆர். பாண்டியன் துவக்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து ஏ.ஆர். வி.குரூப்ஸ் நிறுவனங்கள் விவேக் தலைமையில் கண்காட்சியை தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாநில துணைத்தலைவர் தென்னரசு திறந்து வைக்கிறார். கண்காட்சி அரங்கத்தை முன்னாள் நகர் மன்ற தலைவர் பாண்டியன் தலைமையில் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் செந்தில்குமார் திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து நம்மாழ்வார், நெல் ஜெயராமன் மற்றும் முன்னோடி உழவர்கள் படதிறப்பு - அஞ்சலி செலுத்துதல் நிகழ்வில் நகர் மன்ற தலைவர் கவிதா பாண்டியன் தலைமையில் எம்எல்ஏ மாரிமுத்து படங்களை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து நடைபெற இருக்கும் விழாவில் நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையம் மாநில ஒருங்கிணைப்பாளர் சிஎம்ஏஎஸ். ராஜிவ் வரவேற்புரை யாற்றுகிறார். உயர் மட்ட குழு தலைவர் அசோகன் தலைமை வகிக்க உள்ளார். முன்னோடி இயற்கை விவசாயியும் திருவாரூர் எம்எல்ஏவுமான பூண்டி கலைவாணன் விழாவிற்கு முன்னிலை வைக்கிறார். விழாவில் மாசு கட்டுப்பாட்டு துறை அமைச்சர் மெய்யநாதன், வேளாண்மை ஆணையர் சுப்பிரமணியன், நிர்வாக இயக்குனர் மதுமதி ஐஏஎஸ், மாவட்ட கலெக்டர் சாரு ஸ்ரீ, எஸ்பி சுரேஷ்குமார், இந்திய உணவு பதன தொழில்நுட்பக்கழகத்தின் இயக்குனர் லோகநாதன், பாரம்பரிய விதை நெல் மீட்பாளர் சுனில்குமார், பிஜிஎஸ் இந்தியா சோனல் ஆபிஸர் குமார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

(ஜீன் -18 ஞாயிறு இரண்டாம்நாள்நிகழ்வில்) இயற்கை ஆர்வலரும் புதுக்கோட்டை பேக்கரி மஹராஜ் நிர்வாக இயக்குனருமான அருண் சின்னப்பா தலைமை வைக்கிறார். செய்யூர் எம்எல்ஏ பனையூர். பாபு, கேரள மாநிலம் வயநாடு பாரம்பரிய விதை நெல் பாதுகாவலர் பத்மஸ்ரீ விருதாளர் செறுவயல் ராமன், தோட்டக்கலை மற்றும் தோட்டப்பயிர்கள் துறை இயக்குனர் பிருந்தாதேவி, உள்ளிட்ட அரசு அதிகாரிகள் இயற்கை ஆர்வலர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுருகன் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்கின்றனர். பொதுமக்களாகிய அனைவரும் கலந்து கொண்டு உலகப் புகழ் வாய்ந்த திருத்துறைப்பூண்டி தேசிய நெல் திருவிழாவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் பாதுகாப்பு மையத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருப்பின் 9952787998,9443320954 ஆகியஎண்களில்தொடர்பு கொண்டு பயன்பெறலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருத்துறைப்பூண்டி அன்பு மஹாலில் செ.நித்தியானந்தம் - சுபாவின் திருமணம் விழா நல்லகீரை ஜெகநாதன் முன்னிலையில், திருமுருகன் காந்தி மற்றும் வடிவு வீரராஜ் தலைமையில் நடைபெற்றது.

# புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி பட்டறை



புதுக்கோட்டை, ஜூன்.16-

புதுக்கோட்டை லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான ஆறு நாட்கள் ஆங்கில பயிற்சி பட்டறை நேற்று இனிதே தொடங்கியது, ராபீ இன்ஸ்டியூட் ஆப் ஸ்கில் செட் எம்பவர்மெண்ட்டின் நிறுவனர் டேனியல் ஜோஸ்வா பயிற்சி வழங்குவதற்க்காக சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தார். கல்லூரிக்கு வருகை புரிந்த அனைவரையும் கல்லூரியின் முதன்மைச் செயல் அதிகாரி ஏ.வி.எம். எஸ். கார்த்திக் அறிமுகம் செய்து பயிற்சியை தொடங்கி வைத்தார்.

கல்லூரி முதல்வர் கே. கணேஷ் பாபு வாழ்த்துரை வழங்கினார்கள், சிறப்பு விருந்தினர் பேசுகையில் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் பேசினார, ஆங்கில மொழியை ஒரு கருவியாக பயன்படுத்தினால் மாணவர்கள் தங்களின் வெற்றி பாதையை இலகுவாக அடையலாம் என்று கூறினார். ஆங்கிலத்தில் தயக்கமின்றி உரையாடுவதற்க்கான வழிமுறைகளை வரும் நாட்களில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப் போவதாக மாணவர்களுக்கு பயிற்சி கையேடு வழங்கப்பட்டது. அதை பயன்படுத்தி இலக்கணத்தை பிழை இல்லாமல் பேசவும், எழுதவும் எளிமையான வழிகளை கற்று தந்தார். அரசு சார்ந்த போட்டி தேர்வுகளுக்கும் மேலைநாடுகளுக்கு செல்லவும் போன்றவற்றிற்கு இப்பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

கல்லூரியின் தலைவர். ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் சோம. நடராஜன், மேலாண்மை இயக்குநர் ஆர். வயிரவன், செயலர் டி. தியாகராஜன், நிர்வாக இயக்குநர் எம். பாண்டிகிருஷ்ணன் ஆகியோர், கலந்து கொண்டனர்.

# அறந்தாங்கி ஸ்ரீ முனீஸ்வரர் கோவில் 29-ம்ஆண்டு திருவிழாவையோட்டி மாபெரும் மாட்டுவண்டி, குதிரை வண்டி பந்தயம்

அறந்தாங்கி,ஜூன்.16-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி- செக்போஸ்ட் அருகே அமைந்துள்ள ஸ்ரீ முனீஸ்வரர் கோவில் 29-ம்ஆண்டு வைகாசி திருவிழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி குதிரைவண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

பெரியமாடு, நடுமாடு பூஞ்சிட்டுமாடு, கரிச்சான்மாடு, என நான்கு பிரிவுகளாகவும் குதிரை வண்டியில் நடுகுதிரை,சிறியகுதிரை என இரு பிரிவுகளாகவும் மொத்தம் பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில், திருச்சி, தஞ்சை, கோவை, ஈரோடு, மதுரை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 80 க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டிகளும் 25 குதிரை வண்டிகளும் போட்டியில் கலந்து கொண்டன, போட்டியில் கலந்து கொண்ட மாட்டுவண்டி மற்றும் குதிரை வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை நோக்கி சீறிப் பாய்ந்தன.

போட்டியில் வெற்றி பெற்று ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டுவண்டி குதிரைவண்டி உரிமையாளர்களுக்கு ரூ.3 லட்சம் ரொக்கப்பணம் மற்றும் பரிசுக்கோப்கைகளும் வழங்கப்பட்டது. பந்தைய நிகழ்ச்சியை காண சாலையின் இரு புறமும் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கண்டு ரசித்தனர், அறந்தாங்கி காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்

# தென்காசி மாவட்டம் பால மார்த்தாண்டபுரத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம்



தென்காசி, ஜூன். 16-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட பால மார்த்தாண்டபுரத்தில் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு சத்திரிய விநாயகர் திருக்கோவில் வளாகத்தில் வைத்து தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நடைபெற்றது.

இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம் நிகழ்ச்சியினை நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தலைமை வகித்து தொடங்கி வைத்தார், அப்போது அவர் பேசுகையில் நம்முடைய சமுதாய சந்ததிகள் உயர்கல்வி கற்பதற்கும், நல்ல வேலை வாய்ப்புகளை பெறுவதற்கும், உதவுகின்ற நோக்கமாக தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு மாணவர்களையும் படித்து பட்டம் பெற்ற இளைஞர்களையும் ஊக்குவித்து வருகிறது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன், பால மார்த்தாண்டபுரம் கிளைத் தலைவர் மாரியப்பன், செயலாளர் மாரிமுத்து, இளைஞர் அணித் தலைவர் சுரேஷ்குமார், செயலாளர் நாராயணன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர், முடிவில் சுப்பிரமணியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# உலக இரத்தக் கொடையாளர்கள் தினத்தில் கொடையாளர்களுக்கு பாராட்டு



**புதுக்கோட்டை , ஜூன். 16-**

உலக ரத்த கொடையாளர்கள் தினத்தில் இதுவரை 2500 க்கும் மேற்பட்ட உயிர்களை காப்பாற்றியிருக்கக்கூடிய புதுக்கோட்டை கார்த்திக் மெஸ் மூர்த்தியின் சிவகாமி அம்மாள் ரத்ததான கழகம் பாராட்டி கௌரவிக்கப்பட்டது.

1901ல்ABOஇரத்தவகையைக் கண்டுபிடித்த,நோபல்பரிசுபெற்ற டாக்டர் கார்ல் லேண்ட்ஸ்டைனர் பிறந்தநாள் (ஜூன் 14-1868). அவரின் சேவையைப் போற்றும் வகையிலும், இரத்ததானத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காவும் மற்றும் இரத்தக் கொடையாளர்களின் சேவையைப் பாராட்டுவதற்காவும் இந்த நாள் உலக இரத்தக்கொடையாளர் தினமாக 2005ஆம் ஆண்டிலிருந்து உலக சுகாதார நிறுவனத்தால் கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில் உலகெங்கும் இருக்கும், 'உதிரம் கொடுத்து உயிர்காக்கும்' இரத்தக்கொடையாளர்கள் கொண்டாடப்படுகிறார்கள். 2023 ஆண்டுக்கான இந்த தினத்திற்கான ஸ்லோகம் "இரத்ததானம் செய்யுங்கள், பிளாஸ்மாவைக் கொடுங்கள், வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளுங்கள், அடிக்கடி பகிர்ந்து கொள்ளுங்கள்'(Give blood, Give plasma, Share life , Share often) என்பதாகும். இந்த வகையில் இரத்ததானம் செய்யும் மரம் நண்பர்களின் இணைச் செயலர் மற்றும் புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினர் சா.மூர்த்தி குடும்பத்தினர், அவர்களின் 'உயிர்காக்கும் சேவையைப் பாராட்டி, புதுக்கோட்டை மரம் நண்பர்கள் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்தனர்.

மூர்த்தி குடும்பத்தில் , மூர்த்தி, அவர் துணைவியார் சித்ரா, மகன் ராம்பாரதி, சகோதரர்கள் ராமமூர்த்தி, கார்த்திக் மற்றும் வைத்தியலிங்கம் அனைவரும் இரத்தக் கொடையாளர்கள். மூர்த்தி, சித்ரா, ராமமூர்த்தி மற்றும் வைத்தியலிங்கம் ஆகியோர் பாராட்டுப் பெற்றனர். மூர்த்தி, தன் தாயார் பெயரின் 'சிவகாமி அம்மாள் இரத்தானக் கழகம்,' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் வழி இதுவரை 2500க்கு மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்.

நிகழ்வில் மரம் நண்பர்களின் ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் ஜி.எட்வின், சா.விஸ்வநாதன், செயலர் பழனியப்பா கண்ணன் , உறுப்பினர் பாரதவிலாஸ் கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு மூர்த்தி குடும்பத்தினரை பாராட்டி வாழ்த்துதெரிவித்தனர். மேலும், இந்நிகழ்வில் மருத்துவர் ஜி.எட்வினும், பழனியப்பா கண்ணனும் அவர்களின் இரத்தக் கொடை சேவைக்காக பாராட்டப்பட்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# செந்தில் பாலாஜியை அமைச்சரவையில் இருந்து நீக்க ஆளுநரிடம் அதிமுக மனு

# திருத்துறைப்பூண்டியில் தேசிய நெல் திருவிழா நாளை தொடங்குகிறது





# அமைச்சரவையில் மாற்றம் முத்துசாமி தங்கம் தென்னரசுவுக்கு ஜாகபாட்


| சென்னை / புதுக்கோட்டை | 16.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
| --- | --- | --- | --- | --- |

புதுகை வரலாறு நாளிதழ்

16.06.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கருமுத்து தியாகராஜன் செட்டியார் , தமிழகத் தொழிலதிபர் (பி.1893) (இ.1974)



கோட்டா ராமசுவாமி , இந்தியத் துடுப்பாட்டக்காரர் (பி.1896) (இ.1990)



என். சந்தோசு எக்டே , இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி (பி.1940)



குமாரி கமலா , தென்னிந்திய நடிகையும், பரதநாட்டியக் கலைஞர், பாடகி (பி.1934)



## இன்றைய நினைவு நாள்

சித்தரஞ்சன் தாஸ் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி.1870) (இ.1925)



சார்லசு கோர்ரியா , இந்தியக் கட்டிடக்கலைஞர் (பி.1930) (இ.2015)



எல்முட் கோல் , செருமனியின் 6வது அரசுத்தலைவர் (பி.1930) (இ.2017)



## பன்னாட்டு ஆப்பிரிக்கக் குழந்தை நாள்